செ. வெ. எண் : 449

18/7/2007

# செய்தி வெளியீடு

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் அரசு செயலர், நெடுஞ்சாலைத்துறை மற்றும் நெடுஞ்சாலைத்துறை பொறியாளர்களுடன் பணிகள் குறித்தத ஆய்வினை 18.07.07 அன்று மேற்கொண்டார்.

அவ்வமயம் ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நடப்பு ஆண்டில் தமிழகத்திலுள்ள மாநில நெடுஞ்சாலைகளை அகலப்படுத்தும் பணிக்கு **மாண்புமிகு முதல்வர்** அவரகள் ரூ. 729 கோடி நிதி ஒதுக்கீடு அளித்தார்கள். இது குறித்து விவாதித்து நடப்பு ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் பணிகளை தெரிவு செய்யும்போது, விருதுநகர், ராமநாதபுரம், சிவகங்கை, திண்டுக்கல், தேனி, மதுரை உதகமண்டலம், ஈரோடு, கோயம்புத்தூர், கரூர், திருவாரூர், புதுக்கோட்டை, கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, செங்கல்பட்டு ஆகிய 16 மாவட்டங்களில் ஒரு வழித்தட அகலமுள்ள மாநில நெடுஞ்சாலைகளே இல்லாது தெரிவு செய்து ஒப்புதல் அளிக்க முடிவு செய்யப்பட்டது.

மேலும், இப்பணிகளை நடப்பு ஆண்டில் செய்து முடிக்கும் போது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சட்டப் பேரவையில் அறிவித்தவாறு முதல் கட்டமாக தருமபுரி, கிருட்டினகிரி, கோயம்புத்தூர் மற்றும் சேலம் ஆகிய 4 மாவட்டங்களில் அனைத்து மாநில நெடுஞ்சாலைகளும் இரு வழித்தடமாக மாற்றப்பட்டுவிடும்.

மேலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நெடுஞ்சாலைத் துறையில் மரம் நடும் பணிகள் முன்னேற்றம் குறித்து விரிவான ஆய்வுகள் மேற்கொண்டு, அவற்றை வளர்ப்பதைவிடவும், பராமரிப்பது மிக இன்றியமையாதது என்று கூறினார். இதனை வெற்றிகரமாக நிறைவேற்ற மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அறிவுறுத்தினார்.

அனைத்து மாநில நெடுஞ்சாலை மற்றும் மாவட்ட முக்கிய சாலைகளில் எல்லைக் கற்கள் நடும் பணி முறையே ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் 2007–க்குள் முடிக்கப்பட வேண்டுமெனஅதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். விபத்துப் பகுதிகளை மேம்பாடு செய்யும் பணிகளை விரைவில் முடிக்குமாறு, மீதமுள்ள விபத்துப் பகுதிகளையும் கண்டறிந்து அவற்றை மேம்பாடு செய்து விபத்துக்கள் நடப்பதை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

தரைமட்டப் பாலங்களில் வெள்ள சேத அளவுகோள்களை நடும் அவசியம் குறித்தும் அறிவுறுத்தினார்.

வெளியீடு: இயக்குநர், செ.ம.தொ. துறை, சென்னை-9.